சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 06.03.2021 | supeedsam.com | supeedsam@gmail.com

கிழக்கில் கொரோனாவால் மரணித்த 9 போரின் சடலங்கள் ஒட்டமாவடியில் அடக்கம்

(எஸ்.எம்.எம்.முர்ஷித், ந.குகதர்சன். ரக்ஸனா)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என்று சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்துக் கமைய நேற்று வெள்ளிக்கிழமை ஒன்பது சடலங்கள் ஒட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சூடுபத்தின சேனையில் அடக்கம் செய்யப் பட்டுள்ளது.

கொரோனா தொற்று மூலம் மரணித்த ஜனாஸாக்களில் அட்டாளைச்சேனை ஒருவர், காத்தானகுடி ஒருவர்,

02 ஆம் பக்கத்தில்...

அம்பாறை மாவட்டத்திலும் அகிம்சை வழியில் சுழற்சி முறையிலான போராட்டம்

(சகா, குமணன்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளபொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான சுழற்சி முறையிலான அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று அம்பாறை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

நேற்று காலை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி

02 ஆம் பக்கத்தில்...

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ அவர்களது நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டபோது.

மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில்

சிவராத்திரி விழா, பாலாவியில் தீர்த்தம் ஆட தடை

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பாடல் தலமான திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் மகா சிவராத்திரி விழா வருடந்தோறும் நடைபெறுவது போன்று இம்முறையும் நடைபெறும்.

02 ஆம் பக்கத்தில்...

மட்டக்களப்பு மாவட்ட சிறுபோக பயிர்ச் செய்கைக்கான உரவிநியோகத்தினை உரிய காலத்தில் வழங்க அரசாங்க அதிபர் கருணாகரன் நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்ட சிறுபோக பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான உரவிநியோகம் உரிய நேரத்திற்கு வழங்கப்படுவதற்கு மாவட்ட அரசாங்க

02 ஆம் பக்கத்தில்...

பிரச்சினைக்குத் தீர்வைக் கேட்டால் மேலுமொரு பிரச்சினையை உருவாக்குவதே அரசின் நோக்கமாக இருக்கின்றது

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்

(துதி)

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கேட்டால் இனவன்முறைகளையும், இனவழிப்புகளையுமே அரசு வழங்கியது. தற்போது ஜனாசாக்களை எரிக்காது அடக்கம் செய்யுமாறு தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து கோரியதற்கு, இரணைத்தீவில் சடலங்களைப் புதைக்கலாம் என்று அங்கு வாழும் மக்களுக்கு மேலுமொரு பிரச்சினையை உருவாக்கி சமூகங்களைப்

02 ஆம் பக்கத்தில்...

மட்டக்களப்பில் போதைப் பொருள் பாவனையினைத் தடுக்க விழிப்புனர்வு செயற்பாடு ஆரம்பித்து வைப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

போதையற்ற நாடு சௌபாக்கியமான தேசம் எனும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்பில் போதைப் பொருள் பாவனையினைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் உதவி

02 ஆம் பக்கத்தில்...

பொத்துவில் பிரதேச செயலரினால் மீள்குடியேற்ற பகிரங்க அறிவித்தல்!

ஆட்சேபனை இருந்தால் பொது மக்கள் 15 க்கு முன்னர் அறிவிக்கலாம்

(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் 60ஆம் கட்டை கனகர்கிராம தமிழ்மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.அதன் முன்னோடியாக பொத்துவில் பிரதேச செயலாளர்

02 ஆம் பக்கத்தில்...

புதிய அமைப்பு, கட்சி என்பது ஏமாற்று வேலைத்திட்டமே, த.தே.கூ விலிருந்து வெளியேறியவர்கள் மீள வந்து தமிழ்த் தேசியத்துக்காகப் போராட வேண்டும்

முன்னாள் பா.உ.சந்திரநேரு சந்திரகாந்தன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுச் சென்றவர் அந்தக் கட்டமைப்புக்குள்ளே மீண்டும் வந்து இணைந்து ஒற்றுமைப் பட வேண்டும். போராட வேண்டும். அதனை விடுத்து புதிய அமைப்பை, கட்சியை உருவாக்குவது ஒரு ஏமாற்று வேலைத்திட்டமாகவே இருக்கும் என்று அம்பாரை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 25605: cicero

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

புதிய அமைப்பு, கட்சி என்பது ஏமாற்று வேலைத்திட்டமே, த.தே.கூ விலிருந்து வெளியேறியவர்கள்...

ஜெனிவா விடயத்தில் செயற்படுவதற்காக அண்மையில் பல கட்சிகள் சேர்ந்து ஒரு அமைப்பாக உருவாகியிருந்தமை தொடர்பில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

பல கட்சிகளாக நாங்கள் பிரிந்து பிரிந்து போகப் போக பேரினவாத சக்திகளுக்கு, தென்னிலங்கை அரசாங்கத்திற்கு எங்களைப் பிரிப்பதற்கு இலகுவாகிப் போய்விடும். காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டபோது எங்களது பலம் சிறப்பாக இருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அப்போது 22 ஆக இருந்து இப்போதைய நிலை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகப் போனதாகத்தான் பார்க்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் எம்மிடம் இருக்கும் கட்சி , அரசியல் கருத்து வேறுபாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு மக்களுக்காகச் சிந்தித்து செயற்படவேண்டியது காலத்தின் அவசியம்.

பல கட்சிகளும் பல தீர்மானங்களை எடுப்பதனால் மக்களும் குழம்பி, எல்லோரும் குழம்பி, எதிர்கால சந்ததியினரும் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதில் முக்கியமானது என்னவென்றல் யுத்தங்கள், இறுதி யுத்தம் நடைபெறும் வேளையில் மௌனிகளாக இருந்துவிட்டு, எதிர்வரும் தேர்தல் காலங்களுக்காக தங்களைப் பிரபலப்படுத்தவதற்காக தேர்தல் களத்தில் குதிப்பதற்காக இவ்வாறான அமைப்புக்களை உருவாக்கி அதில் முன்பு ஒளித்துக் கொண்டிருந்தவர்களைக் கொண்டுவந்து தலைவராக்குவது ஒரு வீண் செயல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுப் போன தலைவர்கள், தமிழ்த் தேசியத்துக்காக பாடுபட்ட தலைவர்களைத் தேடிக் கண்டுபிடித்து ஒரு குடைக்குக் கீழ் வந்து ஒரு பயணம் நடத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கசப்புணர்வுகளைக் களைந்து அதனைப் பதிவு செய்து முன்னகர்த்தல் இப்போதைய தேவை.

தமிழ் மக்களின் எந்தவொரு விடயமாக இருந்தாலும், ஜெனிவா என்று சொன்னாலும் ஒரு குழுவே முடிவெடுக்க வேண்டும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஒரு முடிவாக இருந்து செயற்படுவோமாக இருந்தால், சுதந்திரக்கட்சியில் இருந்து தனிப் பெரும் பான்மையாக மொட்டுக் கட்சி உருவாகி இன்று 69 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருக்கிறது. அதற்கு அவர்களின் ஒற்றுமையே காரணம். நாம் ஒற்றுமையாக இருக்காத பட்சத்தில் எதுவும் சாத்தியமில்லை.

அது மட்டுமல்லாமல் இளைஞர்களையும் உள்வாங்கி அவர்களுக்கு தகுந்த பதவிகளைக் கொடுத்து எதிர்கால சந்ததிகளை உருவாக்க வேண்டும். வெறுமனே அறிக்கை விண்ணர்களாக இல்லாமல் செயல் வீரர்களை உருவாக்கவேண்டியது எமது கடமை.

எப்படி ஜனாசா விடயத்தில் முஸ்லிம் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லாமையை அரசு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதோ, அதே போலதான் ஒற்றுமை இல்லாமல்தான் அனைத்து தமிழ்க் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒற்றுமைக்குள் வராத வரையில் தமிழ் மக்களுக்கு விமோசனம் இல்லை. பல அமைப்புகள், நிறுவனங்கள் தமிழ் மக்களுக்காக இருந்தாலும், ஒற்றுமை ஒரு முக்கியம் மிக்கதாகும். ஏற்கனவே தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து வெளியே சென்றவர்களுக்கு அது கஸ்ரம்.

அவர்கள் அந்தக் கட்டமைப்புக்குள் வந்து செயற்பட்டாலே நன்மை பயக்கும். கட்சியில் இருந்து பிரிந்து கட்சி , கட்சிக்கு கட்சி, கட்சிக்காகக் கட்சி , கட்சியாகப் பிரிந்து என்று கட்சியைத் துறப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. அந்த வகையில் புதிய கட்சிகள் தொடங்குவதால் பிரயோசனம் இல்லை. இதனை நான் ஒரு ஏமாற்றுப் பேர்வளி வேலையாகவே பார்க்க வேண்டும்.

மட்டக்களப்பில் போதைப் பொருள் பாவனையினைத் தடுக்க விழிப்புனர்வு....

மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் தலைமையில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு செயலனியின் விசேட கூட்டம் உதவி மாவட்ட செயலாளர் நவேஸ்வரன் தலைமையில் நேற்றுஇடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் நாடுபூராகவும் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் விழப்புணர்வு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதனடிப்படையில் வாகனங்களில் விழிப்புனர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கருகாமையில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் போதைப் பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துனை ஆலேசனை தொலைபேசி துரித இலக்கமான 1927 இன் மூலம் தற்பொழுது வழங்கப்பட்டுவருகின்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மாவட்ட இணைப்பாளர் ஜீ. விஜயதர்சன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்குப்பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் டாக்கடர் அருளானந்தம், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை உயர் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரி உட்பட பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின்கீழ் இயங்கிவரும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் போதைப் பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதன் பாவனையால் துன்பப்படுபவர்கள் அதிலிருந்து விடுபடுவதற்குமான உளவள ஆலேசனைகள் தொடராக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி விழா...

கொவிட் தொற்று நோய் காரணமாக சுகாதார நடைமுறைகளை கவனத்தில் எடுக்கப்பட்ட நிலையில் பக்தர்களின் பக்தி முயற்சிகளில் மட்டுப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. வெளி மாவட்டங்களிலிருந்து இங்கு வருவோருக்கு கடந்த காலங்களைப்போல் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11 ந் திகதி (11.03.2021) நடைபெற இருக்கும் சிவராத்திரி விழாவை முன்னிட்டு மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் இறுதி ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தலைமையில் திருக்கேதீஸ்வரம் சம்பந்தர் மடத்தில் வெள்ளிக்கிழமை (05.03.2021) இடம்பெற்றது.

இவ் கூட்டத்தில் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் குணபாலன் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை இணைச் செயலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன், உப தலைவர் பிரிந்தாவனம், ஆலய பிரதம குருக்கள் சிவசிறி ரி.கருணாநாத குருக்கள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இவ் கூட்டத்தில் சுகாதார அறிவுரைகளுக்கு அமைவாக பக்தர்கள் கலந்து செல்லும்போது அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய ஏற்பாடுகள் கலச்தாலோசிக்கப்பட்டன.

சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு. மின்சாரம், நீர் வழங்கல், உணவு, பாதுகாப்பு நடவடிக்கை போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

இது தொடர்பாக திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை இணைச் செயலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

மன்னார் பாடல் தலமான திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் மகா சிவராத்திரி விழா வருடந்தோறும் நடைபெறுவது போன்று இம்முறையும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்தபோதும் தற்பொழுது நாட்டில் நிலவிவரும் கொரோனா தொற்றுநோய் காரணமாக ஒரு சில கட்டுப்பாடுகளுடனும் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் பக்தி முயற்சிகளை மேற்கொள்ளும்படி சுகாதார பிரிவினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிவராத்திரி தினம் அன்று திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நான்கு சாம பூஜைகள் நடைபெறும். மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே கலந்து கொள்ள வேண்டும் என வேண்டப்பட்டுள்ளதால் அன்றைய தினம் இங்கு வரும் பக்தர்கள் குறுகிய நேரத்தில் தங்கள் பக்தி முயற்சிகளை முடித்துக் கொண்டு இங்கு வந்து செல்லும் ஏனைய பக்தர்களும் கலந்து கொள்வதற்காக பக்தர்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் நாங்கள் எதிர்பார்த்து நிற்பதுடன் அதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வழமையாக பக்தர்கள் பாலாவியில் தீர்த்தம் ஆடி காவடிகள் எடுப்பது வழமையானது. ஆனால் கொவிட் தொற்றுநோய் காரணமாக இம்முறை பாலாவியில் தீர்த்தம் ஆடுவதும் தீர்த்த காவடிகள் எடுப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதும் இங்குள்ள ஆலய குருக்கள் சுவச்சாரிகள் பாலாவியில் நீரை எடுத்து வந்து சிவனுக்கு அபிஷேகம் செய்வார்கள். கடந்த காலங்களில் இவ் விழாவுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து பெருந் தொகையான பக்தர்கள் வந்து செல்வதால் அவர்களுக்கான போக்கவரத்து வசதிகள் செய்து கொடுப்பது வழமையாக இருந்து வந்தபொழுதும் இம்முறை இவ்வாறான வசதிகள் செய்து கொடுப்பதில்லையென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வெளி மாவட்டங்களிலிருந்து வருவோருக்கு எவ்வித தடையும் இல்லை. ஆனால் சுகாதார நடைமுறைகளை கவனத்தில் எடுத்து செயல்படும்படியும் வேண்டப்பட்டுள்ளது என திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை இணைச்செயலாளர் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிறுபோக பயிர்ச் செய்கைக்கான உரவிநியோகத்தினை...

அதிபர் கே. கருணாகரன் நடவடிக்கை எடுத்துள்ளார். உரஉற்பத்தி மற்றும் வழங்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர்களான மகேஸ் கம்பன்பில, சுனில் கலுகம மற்றும் தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர் ஜெ.ஏ.டீ. ரொசான் ஆகியோருக்கிடையலான சந்திப்பொன்று அரசாங்க அதிபர் கருணாகரன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தேசிய உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்புச் செய்யும் பெரும்போகம் மற்றும் காலபோக விவசாய பயிர்ச்செய்கைகள் ஏனைய மாவட்டங்களைவிட இம்மாவட்டத்தில் முதலில் செய்கைபண்ணப்படுகின்றன. இப்பயிர் செய்கைக்கான உரவிநியோகம் ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்படுவதுபோல் இம்மாவட்டத்திற்கு வழங்கப்படுவதனால் உரிய காலத்திற்கு உரம் கிடைக்காமையினால் விவசாயிகள் பரிதும் சவால்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதற்கமைவாக இச்சந்திப்பின்போது உரிய காலத்தில் உரவிநியோகத்தினைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும் இம்மாவட்ட விவசாயிகள் உரத்தினைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. இதனூடாக இம்முறை சிறுபோகத்திற்கான உரவிநியோகம் சீராகவழங்கக் கூடியதாக இருக்கும் என நம்பப்படுவதாக மாவட்ட உரச்செயலக உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம். சிராஜுதீன் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது மாவட்ட உரச்செயலக உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம். சிராஜுதீன், கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் கே. ஜெகநாத், விவசாயவிரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வீ.பேரின்பராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கில் கொரோனாவால் மரணித்த 9 பேரின் சடலங்கள் ஓட்டமாவடியில் அடக்கம்...

அக்கறைப்பற்று ஒருவர், சாய்ந்தமருது மூன்று, கோட்டமுனை ஒன்று, ஏறாவூர் இரண்டுமாக மொத்தம் ஒன்பது சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் காணிகளை அண்மித்த இடங்களின் இராணுவத்தினர் பலத்த பாதுகாப்புடன் செயற்படுவதுடன், அனுமதி இல்லாதவர்கள் மற்றும் ஊடவியலாளர்கள் ஆகியோர் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

கொரோனா தொற்றினால் மரணித்தவர்களின் உடல்களை குறித்த காணியில் அடக்கம் செய்வதற்காக வெக்கோ வாகனங்கள் மூலம் குழிகள் தோண்டப்பட்டிருந்தது ஒவ்வொரு குழிகளுக்கும் மூன்று அடி இடைவெளியில் தோண்டப்பட்டுள்ளது.

இதனை மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பிராந்திய பணிமனை அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், ஓட்டமாவடி பிரதேச செயலக அதிகாரிகள், ஓட்டமாவடி பிரதேச சபை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுமார் ஒரு வருட காலமாக கொரோணாவில் மரணித்த ஜனாசாக்களின் நல்லடக்கத்திற்காக பாடுபட்ட சிங்கள ,தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள், அனைத்து மதப்பெரியார்கள் சிவில் சமூகத்தினர் , வெளிநாடுகளில் வாழும் உறவுகள் மற்றும் துஆப்பிரார்த்தனைகளில் ஈடுபட்ட அனைத்து உறவுகளுக்கும் ஹாபிஸ் நசீர் எம்.பி இந்த சந்தர்ப்பத்தில் பிரார்த்தனை புரிவதாகவும் தெரிவித்தார்.

குறித்த பணிகளை நேரடியாக பார்வையிடுவதற்காக ஒதுக்கப்பட்ட அடைக்கப்பட்ட பகுதிக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானாவும் சென்று நிலமைகளை அவதானித்தார்.

பொத்துவில் பிரதேச செயலரினால் மீள்குடியேற்ற...

சந்தருபன் அனுருத்த பொதுமக்களுக்கான பகிரங்க அறிவித்தலொன்றை கடந்த 1ஆம் திகதி விடுத்துள்ளார். இவ் அறிவித்தல் பரவலாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அசாதாரணசூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்தல் தொடர்பான அறிவித்தல் அது.

அவ்வறிவித்தலின்பிரகாரம் இறுதியாக நடைபெற்ற நேர்முகத்தேர்வினடிப்படையில் அவர்களது பெயர்ப்பட்டியல் இத்தால் காட்சிப்படுத்தப்படுகிறது. ஏதாவது ஆட்சேபனைஇருந்தால் பொதுமக்கள் எதிர்வரும் 15ஆம் திகதிவரை தமக்கு அறிவிக்கலாமெனக்கேட்டுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் இதன் பின்னர் தெரிவுசெய்யப்டும் இறுதிப்பட்டியலின் அடிப்படையில் மீள்குடியேற்றுவதற்கான மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதேச செயலாளர் சந்தருபவன் அனுருத்த அறிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க 1990 யுத்தத்தின்போது போது இடம்பெயர்ந்து 30வருடங்களாக மீளக்குடியேற அனுமதி மறுக்கப்பட்டிருந்த அந்த மக்கள் நேற்றுடன்(5) 926நாட்களாக அதேஇடத்தில் சத்தியாக்கிரகப்போராட்டத்திலீடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரச்சினைக்குத் தீர்வைக் கேட்டால் மேலுமொரு...

பிரித்தாளுவதையே நோக்காகக் கொண்டு அரசு செயற்படுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார். உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் ஆளுமை ஆட்சியாளர்களுக்கு இல்லாததாலேயே பிரச்சினை சர்வதேசம் வரை நீண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் 03ம் நாளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக ரீதியாக அகிம்சை வழிமுறையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்குமாறு அரசிடம் கோரினால், இனவன்முறைகள், இனவழிப்புகளைப் பதிலாக அரசு கொடுத்தது. தற்போது ஜனாசாக்களை எரிக்காது அடக்கம் செய்யுமாறு தமிழ் பேசும் மக்கள் கோரியதற்கு, இரணைத்தீவில் சடலங்களைப் புதைக்கலாம் என்று அங்கு வாழும் மக்களுக்கு மேலுமொரு பிரச்சினையை அரசு உருவாக்கியுள்ளது. சமூகங்களைப் பிரித்தாளுவதே அரசின் நோக்கமாக இருக்கிறது.

தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு என்பதெல்லாம் வெறும் வாய்ப்பேச்சுகளாகவே உள்ளது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதெல்லாம் ஓரினத்திற்குச் சாதகமான ஓசையாகவே இருக்கிறது. சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து 73 ஆண்டுகளாக சிங்கள அதிகார வர்க்கமே ஆட்சி செய்கிறது. நாட்டில் அபிவிருத்தியோ, அமைதியோ ஏற்படவில்லை. தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவுமில்லை. உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் ஆளுமை ஆட்சியாளர்களுக்கு இல்லாததாலேயே பிரச்சினை சர்வதேசம் வரை நீண்டுள்ளது.

சண்டித்தனத்தால் பிரச்சினைகளை உருவாக்கலாம் ஆனால் சமாதானத்தை உருவாக்க முடியாது. சாணக்கியம், சாதுரியம், மனித நேயம் என்பவற்றால் தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இந்த நாடு மியன்மாரின் இராணுவாட்சித் தடத்தைப் பின்பற்றப் போகிறதா? இல்லை தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலாவின் ஜனநாயகத் தடத்தைப் பின்பற்றப் போகிறதா? என்பது தான் எனது கேள்வியாகும் என்று தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலும் அகிம்சை வழியில் சுழற்சி...

வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தினால் அம்பாறை பொத்துவில் பிரதேசத்தில் தொடங்கி அகிம்சை வழியிலா சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் கல்முனை திரௌபதி அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்று வருகின்றது.

இதேவேளை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் உள்ளிட்ட ஒன்பது பேருக்கு நேற்று காலை பொத்துவில் பொலீசார் நீதிமன்ற தடை உத்தரவை வழங்கி உள்ளனர்.

இதேநேரம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச ரீதியில் நீதிவேண்டி வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் பல மாவட்டங்களில் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுழற்சி முறையிலான போராட்டத்தில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் தர்சினி , அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி தம்பிராசா செல்வராணி, தாமோதரன் பிரதீபன் உள்ளிட்டோருடன் சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு வருகின்றனர்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்

முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.

SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage

Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இடம்மாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பொறுப்பேற்காவிடில் பதவிலிருந்து நீக்க உத்தரவு வட மாகாண ஆளுநர் சாள்ஸ்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடம் மாற்றம் செய்தவர்கள் மற்றும் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை இதுவரை ஏற்காதிருந்தால் அவர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளும்படி வட மாகாண ஆளுநர் பி.எம். சாள்ஸ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இம்முறை இடம்பெற்ற இடம் மாற்றங்கள் எந்த அரசியல்வாதிகளின் தலையீடும் இல்லாது சுதந்திரமாக வழங்கப்பட்டதால் அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இணைத் தலைவர்களான வட மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.சாள்ஸ் மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களின் ஆசிரியர்கள் தொடர்பாக ஆராயப்பட்டபோது இடம் மாற்றம் பெற்று சென்றவர்களுக்குப் பதிலாகவும் மற்றும் புதிய நியமனம் பெற்ற ஆசிரியர்கள் அதிகமானோர் இதுவரை தங்கள் பொறுப்புக்களை ஏற்கவில்லையென ஆளுநரின் கேள்விகளுக்கு இரு கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் தங்கள் கருத்துக்களை இவ் கூட்டத்தின்போது தெரிவித்தனர்.

அப்பொழுது வட மாகாண ஆளுநர் தெரிவிக்கையில் நான் கல்வி விடயத்தில் மிக கடுமையாக இருக்கின்றேன். இம்முறை நடைபெற்ற ஆசிரியர்களின் இடம் மாற்றமானது கல்வி அமைச்சில் சுதந்திரமாக இடம்பெற்றது.

இவ் இடம்மாற்றத்தின்போது எந்த அமைச்சர்களோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ எந்தவித குறுக்கீடுகளும் இடையூறுகளும் செய்யவில்லை. ஆகவே நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இடம்மாற்றம் அல்லது புதிய நியமனம் பெற்று அவர்களுக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளுக்கு சென்று பொறுப்பேற்காத ஆசிரியர்களுக்கு உடனடியாக அவர்களை வேலையிலிருந்து நீக்குவதாக அறிவிக்கும்படியும் பொறுப்பேற்காத ஆசிரியர்களின் பெயர் பட்டியலை தனக்கு உடனடியாக அனுப்பி வைக்கும்படியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநர் கட்டளை பிறப்பித்தார்.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு செல்லாது மாவட்ட மட்டத்திலோ அல்லது வலய மட்டத்திலோ அல்லது கோட்டம் மட்டத்திலோ பல்லாங்குழி விளையாட்டுப்போல் நடாத்தினீர்கள் என்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

கல்மடு கிராமசேவகர் பிரிவில் வீடுகள் கையளிப்பு

(அனுருத்தன்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கல்மடு கிராம சேவகர் பிரிவில் சௌபாக்கியா சமூர்த்தி வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. உதவி பிரதேச செயலாளர் திருமதி நிருபா பிருந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சமூர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் க.தேவமனோகரி, கருத்திட்ட முகாமையாளர் ந.விஜிதன் சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் ஆர்.பிறேமகாந்தன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். நீண்டகாலமாக அடிப்படை வசதிகள் குறைந்த வீடுகளில் வசித்தோர்கள் அடையாளம் காணப்பட்டு 07 வீடுகள் கையளிக்கப்பட்டது.

குறித்த வீடுகளை வழங்கிய சமூர்த்தி திணைக்களம் மற்றும் உத்தியோகஸ்த்தோர்களுக்கு பயனாளிகள் தமது நன்றியினை தெரிவித்தனர்.

தேசிய நல்லிணக்கம் ஊடாகத்தான் பிரச்சினைகளிற்கு தீர்வு - அமைச்சர் டக்ளஸ்

(எஸ்.தில்லைநாதன்)

தேசிய நல்லிணக்க அணுகுமுறைகளைகளுக்கு ஊடாகத்தான் நாங்கள் எங்களது மக்கள் எதிர்கொள்கின்ற சகல விதமான பிரச்சனைகளுக்கும் தீர்வு காணலாம். அன்றாட பிரச்சனை, அபிவிருத்தி பிரச்சனை, அரசியல் உரிமைப் பிரச்சனை இதைத்தான் நான் நீண்ட காலமாக முன்வைத்து வந்திருக்கின்றேன். இவ்வாறு தெரிவித்தார் மீன்பிடி நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

வடமராட்சி மண்டான் களப்பு நீர் ஏரியில் 40 இலட்சம் இறால் குஞ்சுகளை விடும் நிகழ்வு நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் நான் முன்னெடுக்கின்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு அவர்கள் எப்போதும் ஆதரவாக, அனுசரணையாக தான் இருந்து வந்திருக்கிறார்கள். ஏனென்றால் எனது தேசிய நல்லிணக்கம். தேசிய நல்லிணக்க அணுகுமுறைக்கு ஊடாகத்தான் நாங்கள் எங்களது மக்கள் எதிர்கொள்கின்ற சகல விதமான பிரச்சனைகளுக்கும் தீர்வு காணலாம். அன்றாட பிரச்சனை, அபிவிருத்தி பிரச்சனை, அரசியல் உரிமைப் பிரச்சனை இதைத் தான் நான் நீண்ட காலமாக முன்வைத்து வந்து இருக்கின்றேன். தேசிய நல்லிணக்கம் என்பது அடிமைத்தனமான அரசியலோ அல்லது சரணாகதி அரசியலோ அல்ல. நாங்கள் எங்களது நிலைப்பாட்டிலே எங்களது மக்களது தளத்திலிருந்து, மக்களது பலத்திலிருந்து கொண்டு பேச்சுவார்த்தைக்கு ஊடாக நாங்கள் எங்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதைத்தான் நான் நீண்ட காலமாக சொல்லி வந்து இருக்கின்றேன்.

வரும் காலங்களில் எந்த அளவுக்கு எந்த அளவு நீங்கள் ஒரு சரியான நிலைபாடு நோக்கி அணிதிரள்வீர்களோ அந்தளவுக்கு உங்களை பாதுகாத்து இரத்தம் சிந்தாது, இடம்பெயராது, சொத்துக்களை அழிக்காமல் இன்றைக்கு இருக்கின்ற சூழலை பாதுகாத்து வளப்படுத்தி எடுப்பதுதான் இந்த தேசிய நல்லிணக்க செயற்பாடு.

வருகின்ற சந்தர்ப்பங்களில் சரியான நிலைப்பாட்டை எடுத்துக் கொள்வீர்களானால் நீங்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளலாம் என தெரிவித்தார்.

மட்டக்களப்பில் விஞ்ஞான மற்றும் விவசாய விஞ்ஞானபட்டதாரி பயிலுனர்களை தேசிய உரச்செயலகத்தில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை

ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுனர்களில் விஞ்ஞான மற்றும் விவாசாய விஞ்ஞான பட்டதாரிகளை விவசாய அமைச்சின்கீழ் தேசிய உரச்செயலகத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரி பயிலுனர்களில் தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞான மற்றும் விவசாய விஞ்ஞான பட்டதாரிகளுக்கான பயிற்சி சத்துருக்கொண்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

மாவட்ட உரச்செயலகப் உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம். சிராஜுதீன் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் உரஉற்பத்தி மற்றும் வழங்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர்களான மகேஸ் கம்பன்பில, சுனில் கலுகம மற்றும் தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர் ஜெ.ஏ.டீ. ரொசான் ஆகியோர் கலந்து கொண்டதுடன் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுனர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளராக ஆஸீக் நியமனம்

(சர்ஜுன் லாபீர்)

சாய்ந்தமருது பிரதேச செயலாளராக நற்பிட்டிமுனைச் சேர்ந்த எம்.எம் ஆஸீக் எதிர்வரும் 08 தனது கடமைகளை சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார். சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றிய இவர் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சாய்ந்தமருது பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்று கடமையாற்றவுள்ளர். என்பதோடு இவருக்கான நியமனம் அரச சேவைகள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டது.

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த எம்.எம்.ஆஸீக் சம்மாந்துறை, உஹன ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றிய இவர் பதவி உயர்வு பெற்று சாய்ந்தமருது பிரதேச செயலாளராக கடமையேற்கவுள்ளார். என்பதோடு இவரது துணைவியார் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து நிந்தவூர் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றுகின்றார். அத்தோடு இவர் முன்னாள் கல்முனை பிரதேச செயலாளர் மர்ஹூம் ஏ.எல்.எம் பழீலின் மருமகனும் ஆவார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தேயிலை மலை பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(க.கிஷாந்தன்)

அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டிரதன் தோட்டம் சித்தரவத்தை பிரிவில் தேயிலை மலை பகுதியில் வெள்ளிக்கிழமையன்று ஆணின் சடலம் ஒன்று மதியம் 1 மணியளவில் மீட்கப்பட்டதாக அட்டன் பொலிஸார் தெரிவத்தனர்.

மீட்கப்பட்ட ஆண் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளாரா அல்லது எவராவது கொலை செய்து விட்டு சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மீட்கப்பட்ட சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை.

சடலமாக மீட்கப்பட்ட நபருக்கு 55 - 60 இடைப்பட்ட வயது மதிக்கதக்கவர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர் வெள்ளை சாரமும், மெருன் நிற ஷேட்டும் அணிந்துள்ளார்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை அட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மக்கள் எதிர்ப்பால் இரணைதீவு கைவிடப்படும் சாத்தியம்

(வி.ரிசகாதேவராஜா)

கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாசாக்களை இரணைதீவில் நல்லடக்கம் செய்வதென்ற அரசாங்கத்தின் தற்காலிகமான தீர்மானம் கைவிடப்படலாமென தெரியவருகிறது.

அங்கு தொடரும் மக்களின் போராட்டமும் சமயத்தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளது அழுத்தங்களும் இரணைதீவு கைவிடப்படக்காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை முஸ்லிம்களின் ஜனாசாக்களை அடக்க அம்பாறை மாவட்டத்திலுள்ள இறக்காமம் பகுதியும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒட்டமாவடிப் பகுதியும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. புத்தளத்திலும் ஒருஇடம் பார்க்கப்பட்டிருக்கிறது.

ஓட்டமாவடி பிரதேசசபைக்குட்பட்ட மஜ்மா நகர் கிராமத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்டகாணியில் ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்யப்பட அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

ஓட்டமாவடி பிரதேசசபைத்தவிசாளர் எ.எம். நௌபர் தலைமையில் வியாழன்இரவு அவசர அவசரமாக நடைபெற்ற கூட்டத்தையடுத்து இந்த ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அதனடிப்படையில் அங்கு முதற்கட்டமாக 10குழிகள் தோண்டப்பட்டுவருகின்றன.இன்று அங்கு ஜனாசா நல்லடக்கம் செய்யப்படாமெனத்தெரிகிறது.

இதேவேளை இறக்காமப்பிரதேசத்திலும் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

சுகாதாரத்துறையினர் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அம்பாறை மாவட்டத்தில் நீர்மட்டம் குறைந்த இடங்களை தேர்வு செய்து அடையாளப்படுத்தும் பணியை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று இறக்காமம் பிரதேசதவிசாளர் ஜெமீல் காரியப்பர் தலைமையில் பிரதேச செயலாளர் நசீர் பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் ஊர் பிரமுகர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கூடி கலந்துரையாடி ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய தமது பிரதேசத்தில் அனுமதிப்பதென தீர்மானித்துள்ளனர்.

அதன்படி இறக்காமத்திலும் நல்லடக்கம் செய்யப்படலாம்.

கொரோனா ஜனாஸாக்களை இறக்காமத்திலும் நல்லடக்கம் செய்ய இடம் பரிசீலனை

(நூருல் ஹுதா உமர்)

சுகாதார திணைக்களம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனை என்பன இணைந்து கொரோனா தொற்றினால் மரணிக்கும் முஸ்லிங்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அம்பாறை மாவட்டத்தில் நீர்மட்டம் குறைந்த இடங்களை தேர்வு செய்து அடையாளப்படுத்தும் பணியை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் நீர்வழங்கல் அமைச்சின் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நிபுணர்களையும் உயரதிகாரிகளினதும் ஆய்வு அறிக்கைகளின் படி இறக்காமம் பிரதேசம் அதற்கு பொருத்தமான இடம் எனும் அறிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தலையிட்டு பெற்றுக்கொடுத்தார்.

அதனடிப்படையில் நேற்று இறக்காமம் பிரதேசதவிசாளர் ஜெமீல் காரியப்பர் தலைமையில் பிரதேச செயலாளர், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கூடி கலந்துரையாடி கொரோனா தொற்றினால் மரணிக்கும் முஸ்லிங்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய தமது பிரதேசத்தில் அனுமதிப்பதென தீர்மானித்துள்ளனர்.

அதன் அடுத்த கட்டமாக இன்று காலை இறக்காமம் பிரதேசசபை தவிசாளர் ஜெமீல் காரியப்பர், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பிரதேச அரசியல்வாதிகள் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கள விஜயம் சென்று இடத்தை உறுதிப்படுத்த உள்ளனர். இதன் பின்னர் இவ்விடம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

சூரியவெவ குளத்தின் புனர்நிர்மான வேலைகள் ஆரம்பம்

(பொன்ஆனந்தம்)

நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் சூரியபுர கிராமத்தின் சூரியவெவ குளத்தின் புனர்நிர்மான வேலைகள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமாகிய கபில நுவன் அத்துக்கோரல தலைமையில் நடைபெற்றது.

27 மில்லியன் ரூபாய் நிதி இக்குள புனர்நிர்மாண வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இப்புனர்நிர்மாண வேலைகள் செய்யப்படுவதன் மூலமாக இதில் தற்போது பயிர் செய்யக் கூடிய பரப்பிலும் பார்க்க 350 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் கூடுதலாக மேற்கொள்ளப்பட முடிவதோடு 1200 மில்லி லீட்டர் கனஅளவு நீரை மேலதிகமாக தேக்கி வைக்கக் கூடியதாக அமையும். திருகோணமலை மாவட்டத்தில் நீர்ப்பாசன செழுமை வேலைத்திட்டத்தின் கீழ் 101 குளங்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த வருடத்தில் புனர்நிர்மாணம் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இக்குளம் புனர்நிர்மானம் செய்யப்படுவன் மூலம் விவசாயிகள் பெரும் போகம் மற்றும் சிறு போக நெல் செய்கையை மேற்கொள்ள முடியும். இதன் மூலமாக தாம் எதிர்நோக்குகின்ற நீர் பற்றாக்குறை பிரச்சினையை தீர்ப்பதுடன் உயரிய விளைச்சலைப் பெற்று அதிக வருமானத்தை பெறக்கூடியதாக இருக்கும். இதன் மூலமாக நாட்டினுடைய தேசிய உற்பத்தி அதிகரிக்கப்படுவதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏதுவாக அமையும் என்று இதன்போது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரால இதன்போது தெரிவித்தார்.

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் பயிர் செய்ய முடியுமான அனைத்து பயிர் வகைகளும் உற்பத்தி செய்து தேசிய உற்பத்திக்கு வலுசேர்ப்பதே இதன் நோக்கமாக அமைவதாக இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

மன்னாரில் கொவிட் 19 நோய் தொற்றாளர்களில் 30 நபர்கள் மட்டுமே சிகிச்சை பெற்றுகின்றனர்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று நோய் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இது வரைக்கும் தொற்று நோய்க்கு உள்ளாகியதாக அடையாளம் காணப்பட்ட தொற்றாளார்கள் 255 நபர்களில் தற்பொழுது 30 நபர்கள் மட்டுமே சிகிச்சை பெற்று வருவதாக மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் வியாழக் கிழமை இதன் இணைத்தலைவர்கள் திருமதி பி.எஸ். சாள்ஸ் மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்காதர் மஸ்தான்தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தின் கொவிட் 19 தொடர்பாக தெரிவிக்கப்படுகையில் மன்னார் மாவட்டத்தில் கொவிட் 19 தொற்று நோய் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இது வரைக்கும் கடந்த 3 ஆம் திகதி 255 நபர்கள் அடையாளம் காணப்பட்ட நோய் தொற்றாளர்களாக இருந்ததில் இதிலிருந்து 222 நபர்கள் குணமடைந்து தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்பிரகாரம் மன்னார் நகரத்தில் 1970 நபர்களும், நானாட்டானில் 234 நபர்களும், முசலியில் 341 நபர்களும், மாந்தை மேற்கில் 137 நபர்களும் மடு பிரதேச செயலகப் பிரிவில் 326 நபர்களும் மொத்தம் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 3028 நபர்கள் கொரோனா 19 தொற்று நோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் மன்னார் நகர் பிரிவில் 1759 பேரும், நானாட்டானில் 244 பேரும், முசலியில் 264 நபர்களும், மாந்தை மேற்கில் 62 நபர்களும், மடுவில் 324 நபர்களும் மொத்தமாக 2653 நபர்கள் தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும்.

தற்பொழுது மன்னாரில் 211, நானாட்டானில் 10, முசலியில் 77, மாந்தை மேற்கில் 75, மடுவில் 02 மொத்தம் 375 நபர்கள் தொடர்ந்து தனிமைப்படுத்தலில் இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அடையாளம் காணப்பட்ட கொவிட் 19 நோய் தொற்றாளர்களில் மன்னாரில் 190, நானாட்டானில் 07, முசலியில் 24, மாந்தை மேற்கில் 31, மடுவில் 03 மொத்தமாக 255 நோயாளர்கள் அடையாளம் காணப்படடிருந்தனர்.

இவ் தொற்று நோயால் மன்னார் நகரில் ஒருவரும். முசலியில் இரண்டு நபர்களும் மொத்தம் மூன்று நபர்கள் மரணத்தை தழுவிக் கொண்டனர்.

இவ் நோயிலிருந்து விடுபட்டுள்ளோர் மன்னார் நகரில் 169, நானாட்டானில் 07, முசலியில் 20, மாந்தை மேற்கில் 25, மடுவில் 01 மொத்தம் 222 நபர்கள் கொவிட் 19 லிருந்து குணமடைந்துள்ளனர்.

அத்துடன் மன்னார் நகரில் 20, முசலி 02, மாந்தை மேற்கு 06, மடு 02 மொத்தம் 30 நபர்கள் தற்போது சிகிச்சையில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவ் கொவிட் 19 இன் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பத்தாயிரம் ரூபா உதவி தொகையில் முதல் கட்டமாக ஐயாயிரம் ரூபா உதவி தொகையில் மன்னார் நகரில் 285, நானாட்டானில் 106, முசலியில் 53, மாந்தை மேற்கு 91 மடுவில் 81 நபர்கள் அல்லது குடும்பங்கள் மொத்தம் 616 பேரும்

இரண்டாம் கட்டமாக மன்னார் நகரில் 51, நானாட்டானில் 82, மடுவில் 31 பேரும் மொத்தமாக 164 பேர் உதவிகள் பெற்றுள்ளனர். இன்னும் உதவிகள் கொடுக்கப்பட வேண்டிய குடும்பங்களாக மன்னாரில் 17, நானாட்டானில் 01, முசலில் 18, மாந்தை மேற்கில் 09, மடுவில் 05 மொத்தமாக 50 குடும்பங்கள் இவ் உதவியை பெற வேண்டியவர்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியில் தன்னிறைவு காண்பதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்

முல்லைத்தீவில் காதர் மஸ்தான் எம்.பி.

(ச.தவசீலன்)

ஜனாதிபதி கோதாபாய ராஜபக்ஷ அவர்களின் சிந்தனையில் உருவாகி கௌரவ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலுக்கமைய சமூர்த்தி வதிவிட பொருளாதாரநுண்நிதிய சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி ராஜாங்க அமைச்சு மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஆகியன இணைந்து சுபீட்சமான தொலைநோக்கினைக் கொண்ட யதார்த்தமான சகல பிரஜைகளுக்கும் திட்டவட்டமான ஸ்திரத்தன்மை கொண்ட நாட்டை உருவாக்கும் தூரநோக்கு சிந்தனையில் உருவாகிய சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று வேணாவில், நேசன் குடியிருப்பு, கைவேலி, மருதமடு ஆகிய பகுதிகளை ஒன்றிணைத்து புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் அவர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தி நாட்டின் தொழிற் துறையில் தன்னிறைவு கண்டு உள்ளூர் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை குறிப்பிட்டளவு உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் பிரகாரம் ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்கு பதினைந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு உரையாற்றிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் அவர்கள் இந்த சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின்மூலம உள்ளூர் உற்பத்தியில் தன்னிறைவு காணும் அதே வேளை சுயதொழில், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு அநுகூலங்களை நாம் அடைந்து கொள்வதுடன் நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நாம் அடைந்து விடலாம் எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது

எமது பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறான அபிவிருத்தி பணிகளின் மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுடைய இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்புவதன் மூலம் எமது மக்களின் வாழ்வை சுபீட்சமடையச் செய்யலாம் என மேலும் தெரிவித்தார்.

கொரோனாவை வைத்து தமிழருக்கு அடக்குமுறை:

தடையுத்தரவு: ஐ.நாவுக்காக சிவராத்திரியை கொண்டாடலாமா? தவிசாளர் ஜெயசிறில்

[வி.ரி.சகாதேவராஜா]

மக்கள் ஒன்றுகூடினால் கொரோனா பரவும்.எனவே மக்களை ஒன்றுதிரட்டி போராட்டங்களை நடாத்தக்கூடாது என 1979ஆம் ஆண்டின்15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை சொல்கிறது எனக்கூறி எமக்கு நீதிமன்றினால் தடையுத்தரவு வழங்கப்படுகிறது. ஆனால் மக்கள் பெருமளவில் கூடும் சிவராத்திரியை சிறப்பாகச் செய்யுமாறு பிரதமர் கேட்டுள்ளார்.

இதற்கு இச்சட்டம் பொருந்தமாட்டாதா? ஐ.நாவுக்காக எப்படியும் நடக்கலாமா?.

இவ்வாறு த.தே.கூட்டமைப்பின் அம்பாறைமாவட்ட முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வியெழுப்பினார்.

பொத்துவில் நீதிவான் நீதிமன்றினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது தொடர்பாக கேட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்:

அம்பாறை மாவட்டத்தில் நாளை 07ஆம் திகதிவரை போராட்டம் உண்ணாவிரதம் நடாத்தக்கூடாது என்று நானுட்பட 9பேருக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாம் செல்லும் இடமெல்லாம் தடையுத்தரவு. தமிழர்களின் உரிமைகளையும் போராட்டங்களையும் உணர்வுகளையும் அடக்குவதற்கு கொரோனாச்சட்டத்தை பய்னபடுத்துகிறார்களா? என்று

கருதவேண்டியிருக்கிறது.

இதேவேளை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வலியுறுத்தி லண்டனில் முன்னெடுக்கப்படும் உண்ணாவிரதப்போராட்டத்திற்கு ஆதரவாக நல்லூரிலும் மட்டக்களப்பிலும் சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப்போராட்டம் நடைபெற்றுவருகிறது.

ஆனால் இங்கு அம்பாறை மாவட்டத்தில் மட்டும் பொலிசாரின் முறையீட்டை ஏற்று இத்தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நாம் சட்டத்தை என்றும் மதிக்கிறோம். ஆனால் சட்டம் சகலருக்கும் சமம் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

இதுஇவ்வாறிருக்க சிவராத்திரிவிழாவை நாம் வருடாவருடம் சிறப்பாக நடாத்திவந்திருக்கிறோம். ஆனால் இம்முறை கொரோனா காரணமாக வரலாற்றுப்பிரசித்திபெற்ற சிவன்ஆலயங்களான திருக்கேதீஸ்ஸ்வரம் மற்றும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாகத்தினர் வெளிமாவட்டத்தவர்களை பக்தர்களை கோயிலுக்கு வரவேண்டாமெனக் கூறியிருக்கின்றனர்.

ஆனால், ஆலயங்களில் சிவராத்திரியை சிறப்பாக கொண்டாடுமாறும் வழிபாடுகளில் உணர்வுபூர்வமாக ஈடுபடுமாறும் பிரதமர் கோரியுள்ளதாக இன்றுஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன.ஐ.நா.பேரவை அமர்விற்காக ஒருகாலமும் இல்லாத சிறப்பு இம்முறையா? என்று எண்ணத்தோணுகிறது.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் வீட்டுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைப்பு

[ரக்ஸனா]

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 5 வீடுகள் அமைக்கும் திட்டத்தில்முதலாவது வீட்டிற்கான அடிக்கல் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புகுழு இனைதலைவருமான சிவநேசதுரை. சந்திரகாந்தனால் நடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்களின் சுபிட்சத்தின் நோக்கு மற்றும் வறுமை ஒழிப்புசிந்தனைக்கு அமைவாக உங்களுக்கு ஒரு வீடு நாட்டுக்கு ஒரு அபிவிருத்தி என்கின்ற திட்டத்தின் கீழ் நாடுபூராகவும் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் 5 வீடுகளை வழங்கும் தீர்மானத்திற்கு அமைய மட்டக்களப்பு மாவட்டத்திற்கான முதலாவது வீட்டுக்கான அடிக்கல் வியாழக்கிழமை (04) கோரளைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்றது.

இதில் கோரளைப்பற்று பிரதேச செயலாளர் தனபாலசுந்தரம் மற்றும் கோரளைப்பற்று தவிசாளர் சோபாஜெயரஞ்சித் உட்பட ஏனைய அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

தேசிய போக்குவரத்து தினத்தையொட்டி மட்டு.புகையிரத நிலையத்தில் மரநடுகைத் வேலைத்திட்டம் ஆரம்பம்

[ரீ.எல்.ஜவ்பர்கான்]

தேசிய போக்குவரத்து தினம் நேற்றாகும். இதனையொட்டி மட்டக்களப்பு புகையிர நிலையத்தில் மரம் நடுகை வைபவம் இடம்பெற்றது.

புகையிர நிலைய பிரதம அதிபர் ஏ.பேரின்பராஜா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் மக்கள் வங்கியின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் இ.பீ.ஏ.சிசிறகுமார பிரதம அதிதியாகக்கலந்து கொண்டார்.

மக்கள் வங்கி பிரதி மாவட்ட முகாமையாளர் எஸ்.இளங்கோ தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மட்டக்களப்பு பொறுப்பதிகாரி பி.ரவிசங்கர் உள்ளிட்ட புகையிரத நிலைய உயர்

அதிகாரிகள் பலரும் கொரோனா சுகாதார நடை முறைகளைப் பேணி கலநது கொண்டனர்.

புகையிரத நிலைய வளாகம் முழுவதிலுமாக பயன்தரும் மற்றும் நிழல் தரும்மரங்கள் நடப்பட்டன.

திருக்கோவில் பிரதேசத்தில் சௌபாக்கிய திட்டத்தின் ஊடாக புதிய வீடுகள் கையளிப்பு

[எஸ்.கார்த்திகேசு]

அம்பாரை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி மற்றும் தம்பிலுவில் கிராமங்களில் அரசாங்கத்தின் சௌபாக்கியா திரிய பியச வீட்டுத் திட்டத்தின் ஊடாக வீடற்ற குடும்பங்களுக்கு மூன்று வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக சமூர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் தலைமையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்று இருந்தன.

இவ் புதிய வீடுகளை அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளருமான வேதநாயகம் ஜெகதிசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயனாளிகளிடம் புதிய வீடுகளை கையளித்து இருந்தனர்.

இவ் வீடுகள் சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சௌபாக்கிய திரிய பியச திட்டத்தின் ஊடாக ஒரு வீட்டுக்கு இரண்டு இலட்சம் பெறுமதியான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டு இருந்தன.

இவ் வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளருமான வேதநாயகம் ஜெகதீசன் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா சமூர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.